**இயேசுவின் அன்பையும் நீதியையும் அனைத்து மக்களிடமும் குறிப்பாக சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் மக்களுடன் பகிர்ந்துகொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும்.**




எழுத்தாக்கம்:
முனைவர் கேரி லியு
இயக்குனர்:AOHD KL

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட
மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com



INTERNAL CIRCULATION ONLY

BUL 36/2023


இறைமக்கள் பெரும்பாலும் தெருக்களில் இருப்பவர்களுடன் தங்களைத் தொடர்பு படுத்திக் கொள்வதில்லை. அவர்கள் தவறான/மோசமான வாழ்க்கையைத் தேர்ந்துகொண்டவர்கள், பிச்சைக்காரர்கள்/ போதைப்பொருள் பயன்படுத்துவோர் அல்லது சில சமயங்களில் சோம்பேறிகள் மற்றும் அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திரும்பிச் செல்ல வேண்டியவர்கள் என்று முத்திரை குத்தப்படுகிறார்கள். அவர்கள் கதை என்ன? அவர்கள் எப்படி அங்கு வந்தார்கள்? ஒருவேளை நான் எப்படி உதவமுடியும்? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வதற்கு முன்பே நாம் பல சமயங்களில் அவர்களை முன் கூட்டியே தவறாகத் தீர்மானிக்கின்றோம்.

உலகில் உள்ள எந்த நகரத்திலும் அல்லது ஊரின் தெருக்களிலும் வாழும் இந்த மக்கள் கூட்டம். இயற்கையின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. போக்குவரத்து விளக்கு, தெருவிளக்கு, குப்பைத் தொட்டி, மரங்களைப் போன்று வீடற்ற மனிதர்களைப் பார்க்கும்போதும், அவ்வளவாக கவனிக்காமல் கடந்து செல்கிறோம். இவர்கள் அனைவரும் ஒரு காலத்தில் அன்பு செய்யப்பட்ட, மற்றும் அன்புசெய்யக்கூடிய ஒரு மனிதர்களாக இருந்தனர் என்பதை நினைத்துப் பார்க்கின்றோமா? அவர்களின் தேவைகளைக் காது கொடுத்துக் கேட்கவோ அல்லது கட்டிப்பிடித்து அழுவதற்கும், தங்கள் சோகங்களைப் பகிர/சாய்ந்துகொள்ள ஒரு தோள் கொடுக்கிறோமா? நம்முடையதைவிட பெரியதாக இல்லாவிட்டாலும், நம்பிக்கைகளும் கனவுகளும் அவருக்கும் உள்ளது என்று எண்ணுகின்றோமா?

ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடையவும், பார்வையற்றோர் பார்வை பெறவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்திடவும் இயேசு வந்தார் (லூக்கா 4:18) அவர் விளிம்புநிலையில் உள்ளவர்களுக்குப் பணி செய்தார். தேவையில் இருப்பவர்களுக்குக் கடவுளின் அருளை வழங்கினார். நாம் இயேசுவைப் பின்பற்றுவதாகச் சொன்னால், அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். நாம் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் மனிதாபிமானத்துடன் நமது வசதியான நிலையை விட்டு இறங்கி நமது திருச்சபை சமூகங்களிலும், நமது அண்டை அயலாரிடத்திலும் மட்டுமல்லாமல், தேவையில் இருக்கும் அனைத்து மக்களையும் பார்த்து சேவை செய்தல். இயேசுவின் அன்பையும் நீதியையும் அனைத்து மக்களிடமும் குறிப்பாக சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் மக்களுடன் பகிர்ந்துகொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு இரவில் நகரின் மத்தியில் வாகனத்தை ஓட்டிச்சென்று பார்த்தால், வெறிச்சோடிய இடங்கள், நடைபாதைகள் உள்ள கடைவீதிகள், பாலங்கள், மேம்பாலங்களுக்கு அடியில் தங்கியிருக்கும் மக்களைப் பார்க்கவும், வீடற்ற இவர்களைக் கவனித்து, இயேசுவின் பணியைத் தொடங்க இது நமக்கு ஓர் அழைப்பு.

பிறரை அன்பு செய்வது என்பது கடவுளின் முகத்தைப் பார்ப்பதாகும். Les Miserables


2 & 3 செப்டம்பர் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH


ஆண்டின் பொதுக்காலம் 22 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
**திருஅவையும் விளிம்பு நிலையில் வாழும் மக்களும்**

மாதாந்திர நிகழ்வு:
**உலக குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகள் தினம்**

10 ஆண்டுகளுக்கு முன்பு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிரேசிலில் உள்ள அருள்பணியாளர்களிடம் தங்கள் வசதியான பழக்கவழக்கங்களையும், கசப்பான சூழலையும் விட்டு வெளியேறி, ஏழைகளுக்கும் தேவையில் உள்ளவர்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்று கூறினார். நாம் நம்மை பங்கு அளவில், நம் சமூகங்களில் மட்டும் வைத்துக்கொள்ள முடியாது. ஏனெனில் திரளான மக்கள் நற்செய்திக்காக வெளியே காத்திருக்கின்றனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் சமூகத்தின் விளிம்புகளிலும் எல்லைகளிலும் வாழ்பவர்களுடன் எப்போதும் நெருக்கமாக இருப்பவர். அதிலும் குறிப்பாக, தெருக்களில் இருப்பவர்களைச் சென்றடைவதில் அவர் மிகுந்த அக்கறை காட்டுகிறார். அவர் ஒருமுறை கூறினார்: “நம்மிடம் வருபவர்களை வரவேற்பதற்காக மட்டும் நம் கதவைத் திறந்தால் போதாது, ஆனால் நாம் வெளியே சென்று தேவையில் இருக்கும் மக்களைச் சந்திக்க வேண்டும்.

